# I. தொழிலாளர் துறை

தமிழ்நாடு அரசு நீடித்த தொழில் வளர்ச்சிக்கு அடித்தளமான, இணக்கமான தொழில் உறவுகளை பேணுவதில் தனித்துவம் பெற்று விளங்குகிறது. தமிழக அரசின் தொழிலாளர் கொள்கையானது தொழிற்சாலைகளின் ஒட்டு மொத்த வளர்ச்சி, முன்னேற்றத்துடன் தொழிற்சாலைகளின் வெற்றிக்கு சம அளவில் பங்களிக்கும் தொழிலாளியின் நலனையும் அடிப்படையாக கொண்டுள்ளது. பொருளாதார முன்னேற்றம், சமூகநீதி, தொழில் உறவில் இணக்கம், மனிதவள மேம்பாடு, தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் பணி செய்யும் சூழலை மேம்படுத்துதல், சுமுக தொழில் உறவுகள், தொழில் அமைதி மேம்படும் வகையில் இணக்கமான சூழலை உருவாக்கி பாதுகாத்தல் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிப்பதில் தொழிலாளர் நல சட்டங்களை செம்மையாக அமலாக்கம் செய்தல் ஆகிய இலக்குகளுடன் மாநிலத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தொழிலாளர் நிர்வாக உறவுகள் பேணப்படுகிறது.

## செயல்பாடுகள்

தொழிலாளர் துறை, தொழிலாளர்களின் சட்டப்பூர்வமான உரிமைகளை பாதுகாக்கும் வகையிலும், அவர்களின் நலனை உறுதி செய்யும் பொருட்டும், வேகமான பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்பினை அடைந்திடவும், இணக்கமான தொழில் உறவுகளை பாதுகாக்கும் வகையிலும், தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்தி வருகிறது. குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுதல், சட்டமுறை எடையளவு சட்டத்தினை அமலாக்குதல் மற்றும் தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு வழங்குதல் ஆகியவை தொழிலாளர் துறையின் சில முக்கியமான செயல்பாடுகள் ஆகும்.

## நிர்வாக அமைப்பு

நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர் வர்க்கத்திற்கும் இடையே இணக்கமான இணைப்பினை எய்துவதை நோக்கி பல்வேறு தொழிலாளர் சட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு 568 அலுவலர்கள் மற்றும் 2,028 பணியாளர்கள் தொழிலாளர் துறையில் உள்ளனர்.

தொழிலாளர் வர்க்கத்திற்கு சிறப்பான சேவை செய்திட அமலாக்கம் மற்றும் சமரச பணிகளை மேற்கொள்ளும் அலுவலர்களுக்கு 35 வாகனங்கள் வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. 2013 – 2014 ஆம் ஆண்டில் சட்டமுறை எடையளவுகள் பிரிவினை பலப்படுத்தும் பொருட்டு எடை பாலங்களை சரிபார்ப்பதற்கு வழங்கப்பட்டுள்ள கனரக வாகனத்தை இயக்குவதற்கு 2 ஊர்தி ஓட்டுநர் பணியிடங்களும், ஊர்தி ஓட்டுநருக்கு உதவிட 4 உடனாள் பணியிடங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

**நிறுவன அமைப்பு**

| வ. எண் | பணிநிலைப் பிரிவு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தொழிலாளர் ஆணையர் | 1 |
| 2 | கூடுதல் தொழிலாளர் ஆணையர் | 1 |
| 3 | தொழிலாளர் இணை ஆணையர்கள் | 12 |
| 4 | தொழிலாளர் துணை ஆணையர்கள் | 16 |
| 5 | தொழிலாளர் உதவி ஆணையர்கள் | 24 |
| 6 | தொழிலாளர் ஆய்வர்கள் | 30 |

| வ. எண் | பணிநிலைப் பிரிவு | எண்ணிக்கை |
|---|---|---|
| 7 | தொழிலாளர் அலுவலர்கள் | 50 |
| 8 | தோட்ட நிறுவன ஆய்வர்கள் | 10 |
| 9 | தொழிலாளர் ஆய்வர்கள் (மகளிர்) | 3 |
| 10 | நிர்வாக அலுவலர்கள் | 5 |
| 11 | தொழிலாளர் நல அலுவலர்கள் | 2 |
| 12 | மக்கள் தொடர்பு அலுவலர் | 1 |
| 13 | கணக்கு அலுவலர் | 1 |
| 14 | உதவி மருத்துவர் (தோட்டங்கள்) | 2 |
| 15 | தொழிலாளர் துணை ஆய்வாளர்கள் | 70 |
| 16 | தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள் | 219 |
| 17 | முத்திரை ஆய்வாளர்கள் | 101 |
| 18 | புள்ளி விவர ஆய்வாளர்கள் | 20 |
| **மொத்தம்** | | **568** |

## தொழில் உறவுகள்

ஒரு நாட்டின் வளர்ச்சி மற்றும் வெற்றிக்கு ஆரோக்கியமான தொழில் உறவுகள் மிக முக்கியமானதாக விளங்குகிறது. தங்குதடையில்லாத உற்பத்தி மற்றும் குறைந்து

வரும் தொழிற்தாவாக்கள், நீடித்த மற்றும் துரித தொழில் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றுகின்றன. இன்றைய நவீன தொழில் சமூகத்தில், தொழில் உறவுகள், மிக நுட்பமான மற்றும் சிக்கலான பிரச்சினையாக உருவெடுத்து உள்ளது. அனைத்து பிரிவினரின் நலன் மற்றும் தொழில் அபிவிருத்தி ஆகியவற்றினை அடைய நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இடையே சுமுக தொழில் உறவுகளை பேணுதல் இன்றியமையாததாகும். தொழில் வளர்ச்சி மற்றும் வளத்தை அடைவதற்காக இணக்கமான சூழ்நிலையை உருவாக்குவதில் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையிலான நல்லுறவு பாதுகாக்க தொழிலாளர் துறையின் பணி முக்கியமானது. தொழிலாளர் துறையின் சமரச அலுவலர்களின் உடனடி நடவடிக்கையின் மூலம், தொழிற்தாவாக்கள், கதவடைப்புகள் மற்றும் வேலை நிறுத்தங்களில் விரைவாக தீர்வு காணப்பட்டு தமிழகத்தில் இணக்கமான தொழில் உறவுகளை பேணுவதில் தொழிலாளர் துறை முக்கிய பங்காற்றுகிறது. 2013 – 2014-ஆம் ஆண்டில் 7,193 தொழிற்தாவாக்களுக்கு சமரச அலுவலர்களால் தீர்வு காணப்பட்டன.

**தீர்வு காணப்பட்ட சில முக்கிய தாவாக்கள் :–**

1. தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதிய மறுநிர்ணயம்.
2. தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு ஊதிய மறுநிர்ணயம்.
3. மதுரா கோட்ஸ் நிறுவனத்தில் ஊதிய மறுநிர்ணயம்.
4. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் ஊதிய மறு நிர்ணயம்.
5. திருவள்ளூர் இந்தியன் ஃபர்னிச்சர் நிறுவனத்தின் வேலை நிறுத்தம்.
6. ஸ்ரீபெரும்புதூர் நோக்கியா சீமன்ஸ் நிறுவனத்தின் வேலை நிறுத்தம்.
7. அரக்கோணம் எம்.ஆர்.எஃப் நிறுவனத்தின் வேலை நிறுத்தம்.
8. விசைத்தறி தொழில், ரப்பர் தோட்டத் தொழில் மற்றும் பாத்திர உற்பத்தி தொழிலில் ஏற்பட்ட சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்பட்டன.
9. பல்வேறு தொழிற்சாலைகளில் நடைபெற்ற 21 வேலை நிறுத்தங்கள் மற்றும் 6 கதவடைப்புகள்

**தொழிலாளர் நீதிமன்றங்கள்**

மாநிலத்தில் பன்னிரண்டு தொழிலாளர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள் சென்னையில் நான்கு தொழிலாளர் நீதிமன்றங்களும், வேலூரில் இரண்டு தொழிலாளர் நீதிமன்றங்களும், சேலம், கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒரு தொழிலாளர் நீதிமன்றமும் செயல்பட்டு வருகின்றன. தொழிலாளர் நீதிமன்றங்கள், 1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் இனங்களில், சமரசம் மூலம் தீர்வாகாத தாவாக்களை விசாரித்து தீர்ப்பளிக்கிறது.

1. நிலையாணை சட்டத்தின் கீழ் வேலையளிப்போர் வழங்கும் ஆணையின் பொருத்தமுடைமை மற்றும் சட்டமுறைமை குறித்து ;

2. நிலையாணைகளின் விளக்கம் மற்றும் செயலாக்கம் குறித்து ;

3. பணிநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளரை மீண்டும் பணியமர்த்துதல் மற்றும் பணியிலிருந்து விடுவிக்கும் அல்லது தவறாக பணிநீக்கம் செய்யப்பட்ட

தொழிலாளர்களுக்கு உரிய நிவாரணம் வழங்குதல் உள்ளிட்டவை குறித்து ;

4. ஏற்கனவே நடைமுறையில் இருந்த சலுகைகள் மற்றும் சிறப்புரிமைகளை திரும்ப பெறுதல் குறித்து ;

5. வேலைநிறுத்தம் அல்லது கதவடைப்பின் சட்டவிரோதத் தன்மை அல்லது இதர தொடர்புடையவை குறித்து ;

6. மூன்றாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவை தவிர இதர இனங்கள் குறித்து.

2013-2014-ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், பல்வேறு தொழிலாளர் நீதிமன்றங்களில் 8,026 வழக்குகள் நிலுவையில் இருந்தன. 2013 - 2014 ஆம் ஆண்டில் 1,487 வழக்குகள் பெறப்பட்டு, முந்தைய நிலுவையையும் சேர்த்து 2,498 வழக்குகள் முடிக்கப்பட்டன. தொழிலாளர் நீதிமன்றங்களுக்கு கூடுதலாக அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டதால் 2013-2014-ல் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 7,015 ஆக குறைந்துள்ளது.

## தொழிற் தீர்ப்பாயம்

1947–ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தில் உள்ள மூன்றாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கீழ்க்கண்ட இனங்கள் தொடர்பாக தீர்வம் வழங்க சென்னையில் ஒரு தொழிற் தீர்ப்பாயம் இயங்கி வருகிறது :-

1. சம்பளம் மற்றும் சம்பளம் வழங்கும் காலம், வழங்கும் முறையினை உள்ளடக்கியவை ;
2. ஈடுசெய்யும் மற்றும் இதரபடிகள் ;
3. பணிநேரம் மற்றும் ஓய்வு இடைவெளிகள் ;
4. சம்பளத்துடன் கூடிய விடுப்பு மற்றும் விடுமுறைகள் ;
5. போனஸ், இலாப–பகிர்வு, வருங்கால வைப்புநிதி மற்றும் பணிக்கொடை ;
6. நிலை ஆணைகளுக்கு உட்படாத சில சுழற்சி முறைப்பணிகள் ;
7. பணித்தரம் வகைப்பாடு ;
8. ஒழுக்கவிதிகள் ;
9. சீரமைப்பு ;
10. தொழிலாளர் ஆட்குறைப்பு மற்றும் தொழில் நிறுவனங்களை மூடுதல் ;
11. இதர இனங்கள்.

2013-2014-ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், தொழிற் தீர்ப்பாயத்தில் 97 வழக்குகள் நிலுவையில் இருந்தன. 2013-2014-ஆம் ஆண்டில், 52 வழக்குகள் பெறப்பட்டு, முந்தைய நிலுவையையும் சேர்த்து 31 வழக்குகள் முடிக்கப்பட்டு 2013-2014-ல் தொழிற் தீர்ப்பாயத்தில் 118 வழக்குகள் நிலுவையில்உள்ளன.

**சட்டங்கள் மற்றும் விதிகளின் அமலாக்கம்**

தொழிலாளர் சட்டங்களை அமலாக்கம் செய்வது தொழிலாளர் துறையின் முக்கிய செயலாகும். இத்துறையில் உள்ள அமலாக்கப் பிரிவு, தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் எடையளவு சட்டங்கள் பின்பற்றப்படுவதை உறுதி செய்ய முறையான ஆய்வுகளும் மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சிறப்பாய்வுகளும் மேற்கொள்கிறது. இச்சட்டங்களின் நோக்கங்களை சம்பந்தப்பட்டவர்கள் நிறைவேற்றுவதை உறுதிசெய்வது மற்றும் முரண்பாடுகள் ஏதேனும் இருப்பின் வழக்கு தொடர்வது ஆகியவை அமலாக்க அலுவலர்களின் தலையாய கடமையாகும்.

**தொழிலாளர் துறையால் அமல்படுத்தப்பட்டு வரும் முக்கிய தொழிலாளர் சட்டங்கள் பின்வருமாறு :—**

**தமிழ் நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947**

கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பணிநிலைமைகளை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. கடைகள்மற்றும் வணிக நிறுவனங்களில் பணி துவங்கும் நேரம் மற்றும் முடியும் நேரங்களை கண்காணிக்கவும், ஊதியத்துடன் கூடிய வாராந்திர விடுமுறையினை வழங்கிடவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. மாநிலத்தில் 3,25,387 கடைகள் மற்றும் நிறுவனங்கள் உள்ளன. 2013-2014-ஆம் ஆண்டில், 3,18,281 ஆய்வுகள் அமலாக்க அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டன. 28,495 முரண்பாடுகள் இசைவு தீர்வாக முடிக்கப்பட்டு, இணக்கக் கட்டணத் தொகையாக ரூ.23.85 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. 728 வழக்குகள் நீதிமன்றங்கள் மூலம் முடிக்கப்பட்டு ரூ.54,817 அபராதம் விதிக்கப்பட்டது.

**தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958**

உணவு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. வார விடுமுறை, பணிநேரம், ஊதியத்துடன் கூடிய விடுமுறை, மிகை நேரஊதியம் போன்றவைகள் தொழிலாளர்களுக்கு கிடைப்பதை இச்சட்டம் ஒழுங்குபடுத்துகிறது.

29,979 உணவு நிறுவனங்கள் இம்மாநிலத்தில் உள்ளன. 2013-2014-ஆம் ஆண்டில், உணவு நிறுவனவேலையளிப்பவர்களிடமிருந்து பதிவு மற்றும் புதுப்பித்தல் கட்டணமாக ரூ.10.39 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் 43,863 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 5,506 முரண்பாடுகள் இசைவுதீர்வாக முடிக்கப்பட்டு, ரூ.5.63 இலட்சம் இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. 48 வழக்குகள் நீதிமன்றங்கள் மூலம் முடிக்கப்பட்டு ரூ.12,550 அபராதம் விதிக்கப்பட்டது.

**தமிழ் நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம், 1958**

தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேசிய மற்றும் பண்டிகைநாட்களில் சம்பளத்துடன் கூடிய விடுமுறை அளித்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது.

2013-2014–ஆம் ஆண்டில், 1,06,690 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 7,106 முரண்பாடுகள் இசைவுதீர்வாக முடிக்கப்பட்டு, இணக்கக் கட்டணமாக ரூ.24.15 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்கள் மூலமாக 122 வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.28,808 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது.

**சம்பளப் பட்டுவாடா சட்டம், 1936**

வேலையளிப்போர், பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்தை உரிய காலத்தில் வழங்கவும், வழங்கப்படும் ஊதியத்தில் அங்கீகரிக்கப்படாத பிடித்தங்கள் செய்வதைத் தடுத்திடும் வகையில் துரிதமாக கேட்புமனுக்களை தீர்வு செய்யவும் வழிவகுக்கிறது.

இச்சட்டத்தின் கீழ்வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் கேட்புமனுக்களை விசாரித்து முடிவெடுக்கும் அலுவலர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 2013-2014-ஆம் ஆண்டில், 32,590 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 41 வழக்குகள்தாக்கல்செய்யப்பட்டு ரூ.36,700 அபராதம் விதிக்கப்பட்டது. 103 கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு, ரூ.1.61 இலட்சம் மனுதாரர்களுக்கு சம்பளமாக பட்டுவாடா செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

**ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970**

இத்துறையின் அமுலாக்க அலுவலர்களால் மேற்படிசட்டத்தினை அமுல்படுத்திட சீரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், ஒப்பந்ததாரர்களால் பணியமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்கள் இச்சட்டத்தின் கீழ்வழிவகை செய்யப்பட்டுள்ள பலன்களை பெறுவதை உறுதிசெய்திடவும் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

சில தொழில்களில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை முறைப்படுத்தவும், சில தொழில்களில் அவற்றின்

தன்மையைப் பொறுத்து தடைசெய்திடும் வகையிலும் இச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு கீழ்காணும் செய்முறைகளில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையினை தடைசெய்துள்ளது :–

1. சிமெண்ட் தொழிலில் சிப்பம் கட்டுதல் மற்றும் கோணிப் பைகளில் அச்சிடுதல்.
2. தமிழ்நாடு மின்சாரவாரியத்தின் 19 செய்முறைகள்.

மாநில அரசு வேலையளிப்போர் மற்றும் தொழிலாளர்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளடங்கிய மாநில ஒப்பந்த தொழிலாளர் ஆலோசனை வாரியத்தினை மறு அமைப்பு செய்துள்ளது. இவ்வாரியம் இச்சட்டத்தின் நிர்வாகம் தொடர்பாகவும், இதர இனங்கள் குறித்தும் அரசுக்கு ஆலோசனைகள் வழங்கும்.

2013-2014-ஆம் ஆண்டில், 1,855 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நீதிமன்றங்கள் மூலமாக 3 வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.3,000 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது. 586 நிறுவனங்கள் முதன்மை வேலையளிப்பவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன. 980 ஒப்பந்ததாரர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. பதிவுக்

கட்டணமாக ரூ.8.34 இலட்சம் மற்றும் உரிமக் கட்டணமாக ரூ.2.67 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

**மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டம், 1979**

மாநிலம் விட்டுமாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்களின் பணிநிலைமைகளை முறைப்படுத்தவும், இதர மாநிலங்களிலிருந்து இடம்பெயர்ந்து பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் மற்றும் பாதுகாப்பிற்கும் இச்சட்டம் வழிவகைசெய்கிறது.

2013-2014-ஆம் ஆண்டில், 402 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீதிமன்றங்கள் மூலமாக 1 வழக்கு முடிக்கப்பட்டு ரூ.2,000 அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டது. 260 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, 408 உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. பதிவுக் கட்டணமாக ரூ.78,540/- மற்றும் உரிமக் கட்டணமாக ரூ.38,700/- வசூலிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (பணியாளர்களுக்கு நிரந்தர தகுதி வழங்கல்) சட்டம், 1981**

இச்சட்டம், 24 மாத காலத்தில் 480 நாட்கள் தொடர்ந்து ஒரு தொழில் நிறுவனத்தில் பணிபுரிந்த தொழிலாளிக்கு நிரந்தரத் தகுதி வழங்கப்படுவதை கண்காணிக்கிறது. 2013-2014-ஆம் ஆண்டில், 2,435 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 76 மனுக்களின் மீது உத்தரவு வழங்கப்பட்டுள்ளன.

**மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961**

மோட்டார் போக்குவரத்து நிறுவனதொழிலாளர்களின் நலன்கள் மற்றும் பணி நிபந்தனைகளை முறைப்படுத்த இச்சட்டம் வழிவகை செய்கிறது. பதிவுசெய்யப்பட்ட 2,810 மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் 1,37,258 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

பதிவுக் கட்டணமாக ரூ.56,55,528/- வசூலிக்கப்பட்டுள்ளது. 2013-2014-ஆம் ஆண்டில், 5,802 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 919 முரண்பாடுகளில் இணக்கக் கட்டணமாக ரூ.2,33,500/- வசூலிக்கப்

பட்டுள்ளது. 23 வழக்குகளில் ரூ.4,900 நீதிமன்றம் மூலம் அபராதம் விதிக்கப்பட்டது.

**உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதர பத்திரிக்கைத் தொழிலாளர்கள் (பணிநிபந்தனைகள் மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், 1955**

உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் பத்திரிக்கை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணியமைப்பை முறைப்படுத்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் பத்திரிக்கை நிறுவனங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள இதரநபர்களின் ஊதியம், மத்திய அரசினால் உருவாக்கப்பட்ட ஊதியக்குழுவினால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2013-2014-ஆம் ஆண்டில் 90 ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. நீதியரசர் மஜிதியா தலைமையிலான ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

## தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946

தொழில் நிறுவனங்களின் வேலை அளிப்போர், சான்றளிக்கப்பட்ட நிலையாணைகள் மூலமாக தொழிலாளர்களின் பணி நிலைமைகளை வரையறுக்க இச்சட்டம் வழி செய்கிறது. மண்டலத் தொழிலாளர் இணை ஆணையர்கள் இச்சட்டத்தின் கீழ் சான்றளிக்கும் அலுவலர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 2013-2014–ஆம் ஆண்டில், 267 தொழில் நிறுவனங்களின் நிலையாணைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன.

## தொழிற்சங்கங்கள் சட்டம், 1926

தொழிற்சங்கங்களை பதிவு செய்யவும் மற்றும் தொழிற்சங்க பதிவு குறித்த சட்டத்தினை வகுக்கவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது.

மண்டலத் தொழிலாளர் துணை ஆணையர்கள் தொழிற்சங்கங்களை பதிவு செய்யும் கூடுதல் பதிவாளராக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். இதுவரை மொத்தம் 12,771 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2013-2014-ஆம் ஆண்டில், 244 தொழிற்சங்கங்கள் பதிவு

செய்யப்பட்டு, பதிவுக் கட்டணம் மற்றும் திருத்தக் கட்டணமாக ரூ.41,845/- வசூலிக்கப்பட்டுள்ளது.

**பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972**

பணியாளர்களுக்கு பணிக்கொடை வழங்கிட இச்சட்டம் வழிவகை செய்கிறது. 5 வருடம் பணி முடித்த தொழிலாளி வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் போதோ அல்லது பணியிலிருந்து விலகினாலோ பணிக்கொடை வழங்கப்படுகிறது. மேலும் விபத்து மற்றும் நோயின் காரணமாக இறப்போ அல்லது உறுப்பு செயலிழந்தாலோ பணிக்கொடை வழங்கப்படுகிறது.

மண்டலத் தொழிலாளர் துணை ஆணையர் அலுவலகங்களிலுள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் மற்றும் பெருமண்டலத் தொழிலாளர் இணை ஆணையர்கள் இச்சட்டத்தின் கீழ் முறையே கட்டுப்பாட்டு அலுவலர்களாகவும், மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 2013-2014–ஆம் ஆண்டில், 2,415 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, மொத்தம்

ரூ.80.72 கோடி பணிக்கொடைத் தொகை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

**ஊக்கத் தொகை வழங்கல் சட்டம், 1965**

இலாபம் மற்றும் உற்பத்தி அல்லது உற்பத்தித்திறன் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு போனஸ் வழங்கிட இச்சட்டம் வழிவகுக்கிறது. 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு இச்சட்டம் பொருந்தும். ஊக்கத் தொகை சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட நிறுவனங்களில், தொழிலாளர்களின் எண்ணிக்கை, அதன் பின்னர் 10-க்கு குறையும் நேர்விலும், நிறுவனங்கள் தொடர்ந்து ஊக்கத் தொகை வழங்க வேண்டும்.

நிறுவனத்தின் பொருளாதர நிலை எதுவாக இருப்பினும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊக்கத் தொகை 8.33 விழுக்காடு வழங்க வேண்டும். ஒரு நிறுவனம் இலாபத்தில் இயங்கும்போது கணக்கிட்டு வழங்கப்பட வேண்டிய ஊக்கத் தொகை குறித்த வரைமுறை ஒன்றை இச்சட்டம் வகுத்துள்ளது. ஒவ்வொரு தொழிலாளியின் சம்பளம்

மாதமொன்றுக்கு ரூ.10,000/-க்கு மேற்படாமலும் அக்கணக்கு ஆண்டில் 30 நாட்களுக்கு குறையாமலும் பணிபுரிந்திருந்தால், அவர் போனஸ் பெறத் தகுதியுடையவர் ஆவார். இச்சட்டத்தின் கீழ் அதிகபட்சமாக வழங்கப்பட வேண்டிய ஊக்கத் தொகை 20 சதவீதம் ஆகும்.

**மகப்பேறு நலச் சட்டம், 1961**

பெண் தொழிலாளியின் மகப்பேறுக்கு முந்தைய அல்லது பிந்தைய குறிப்பிட்ட காலத்தில் பணி நிலையினை முறைப்படுத்தவும், மகப்பேறு நல உதவிகளை வழங்கிடவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது.

இச்சட்டத்தின்படி மகப்பேறு காலங்களில் குழந்தைப்பேற்றிற்காக 12 வாரங்கள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு (அதாவது குழந்தை பிறப்பதற்கு முன் 6 வாரங்களும், குழந்தை பிறந்த பிறகு 6 வாரங்களும்), மருத்துவச் சான்றிதழின் பேரில் ஒரு மாத மருத்துவ விடுப்பு மற்றும் கருச்சிதைவிற்காக 6 வார விடுப்பு ஆகியன வழங்கிட வழி வகுக்கிறது. மேலும், பேறுகாலத்திற்கு முந்தைய மற்றும் பேறுகாலத்திற்குப் பிந்தைய கவனிப்பை நிர்வாகம் இலவசமாக

அளிக்கவில்லையெனில், ரூ.3,500/- மருத்துவ போனஸ் வழங்க இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2013-2014–ஆம் ஆண்டில் 10,030 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 4 வழக்குகள் தொடரப்பட்டு ரூ.6,200/- அபராதம் வசூலிக்கப்பட்டது.

**சம ஊதியச் சட்டம், 1976**

ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்கவும் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்புடைய இனங்களில் பாலின அடிப்படையிலான வேற்றுமையைத் தடுப்பதற்கும் இச்சட்டம் வழிவகுக்கிறது. 2013-2014-ஆம் ஆண்டில், 12,300 ஆய்வுகள் அமலாக்க அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981**

இச்சட்டம், தொழிலாளர்கள் பணியிலிருந்து தற்காலிக பணிநீக்கம் செய்யப்படும்போது வழங்கப்பட வேண்டிய பிழைப்பூதியம் குறித்ததாகும். இச்சட்டத்தின் கீழ் மண்டலத் தொழிலாளர் துணை ஆணையர் அலுவலகங்களிலுள்ள தொழிலாளர் உதவி ஆணையர்கள் மற்றும் மண்டலத்

தொழிலாளர் துணை ஆணையர்கள் முறையே அலுவலர்களாகவும், மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 2013-2014-ஆம் ஆண்டில், இச்சட்டத்தின் கீழ் 196 கேட்பு மனுக்கள் முடிவு செய்யப்பட்டு, மொத்தம் ரூ.97.06 இலட்சம் பிழைப்பூதியமாக வழங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், 1923**

பணியில் இருக்கும் போது விபத்தின் காரணமாக ஏற்படும் மரணம் மற்றும் ஈட்டும் திறன் இழப்புக்கு ஏற்ப இழப்பீடு வழங்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. மண்டலத் தொழிலாளர் துணை ஆணையர்கள் இச்சட்டத்தின் கீழ் பெறப்படும் கேட்பு மனுக்களை விசாரித்து முடிவெடுக்க ஆணையர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

இச்சட்டத்தின்படி உத்தரவிடப்படும் இழப்பீட்டுத் தொகை, வேலையளிப்பவர்களால் அல்லது காப்பீட்டு நிறுவனங்களால் வைப்பீடு செய்யப்படுகிறது. இழப்பீட்டுத் தொகை வைப்பீடு செய்யப்படாத நேர்வுகளில், வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் இழப்பீட்டுத்

தொகையினை வசூலிக்க தொழிலாளர் துணை ஆணையர்கள் நடவடிக்கை மேற்கொள்கின்றனர். 2013-2014-ஆம் ஆண்டில், 2,665 வழக்குகள் முடிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு மொத்தம் ரூ.41.57 கோடி இழப்பீட்டுத் தொகை பட்டுவாடா செய்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**குறைந்தபட்ச ஊதிய சட்டம், 1948**

1948-ம் வருட குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் நோக்கமானது சிலபணிகளுக்கு குறைந்தபட்ச ஊதியத்தினை நிர்ணயம் செய்வது ஆகும். இச்சட்டம் மனித வாழ்வாதாரத்தை உறுதிசெய்வதோடு மட்டுமல்லாமல் தொழிலாளர்களின் திறனையும் பாதுகாக்கிறது. இச்சட்ட அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள அனைத்து தொழில் இனங்களுக்கும் இச்சட்டம் பொருந்தும். தமிழகத்தைப் பொறுத்தமட்டில், அட்டவணையில் 92 தொழில்இனங்கள் சேர்க்கப்பட்டு, அவற்றில் கடைகள் மற்றும் நிறுவனங்கள், பொதுப் பொறியியல், கட்டுமானம், உணவுநிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள், தோல்பதனிடுதல் மற்றும் தோல் தயாரிப்பு, பொது மோட்டார் போக்குவரத்து, பஞ்சாலைதொழில்

(வேலைபழகுநர்களுக்கு) போன்ற 73 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. குறைந்தபட்ச ஊதியம் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை மறுநிர்ணயம் செய்யப்படுகிறது. விலைவாசி உயர்வினை ஈடுகட்டும் வகையில் மாறுபடும் அகவிலைப்படியையும் சேர்த்து குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது. 2013-2014-ல், 20 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 20 தொழில்களுக்கு மறுநிர்ணயம் செய்யும் பொருட்டு முதனிலை அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இறுதி அறிவிக்கை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**2013 – 2014**ல், கை எம்பராய்டரி மற்றும் ஜரி தொழில் குறைந்தபட்ச ஊதிய சட்டஅட்டவணை பகுதி–Iல் சேர்க்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்சஊதியச் சட்டப் பிரிவு 20(1)–ன் கீழ் கேட்பு மனுக்களை விசாரணை செய்யும் அலுவலர்களாக வட்டாரத் தொழிலாளர் துணை ஆணையர்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். 2013-2014-ம் ஆண்டில், இச்சட்டத்தின் கீழ் இத்துறையின் மூலம் 1,19,872

ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 183 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு ரூ.92,450 அபராதமாக வசூலிக்கப்பட்டது. மேலும், இக்காலக்கட்டத்தில் 453 கேட்புமனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, மொத்தம் ரூ.1.29 கோடிவழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

## தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951

தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகள், தோட்டத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கவும், பணி நிலைமைகளை முறைப்படுத்தவும் வகை செய்கிறது. 5 ஹெக்டேர் அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பரளவு மற்றும் 15 தொழிலாளர்களுக்கு மேல் பணிபுரியும் டீ, காபி, இரப்பர் மற்றும் ஏலக்காய் பயிரிடப்படும் தோட்ட நிறுவனங்களுக்கு இச்சட்டம் பொருந்தும்.

## சட்ட அமலாக்க அதிகாரிகள்

1951ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் அதன் தொடர்புடைய விதிகள் தமிழ்நாட்டில் 10 தோட்ட நிறுவன ஆய்வர்களாலும், 2 உதவி மருத்துவர்களாலும்,

(தோட்டங்கள்) அமலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. தொழிலாளர் ஆணையர் அவர்களது கட்டுப்பாட்டின் கீழ் தொழிலாளர் இணை ஆணையர்(நிர்வாகம்) அவர்கள் மலைத் தோட்டங்களின் தலைமை ஆய்வராக செயல்பட்டு வருகிறார். தோட்ட நிறுவன ஆய்வர் அலுவலகங்கள் உதகை, கூடலூர், குன்னூர், பந்தலூர், கோத்தகிரி வால்பாறை, ஏற்காடு, வத்தலக்குண்டு, தேனி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. உதவி மருத்துவர்(தோட்டங்கள்) அலுவலகங்கள் உதகை மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த தோட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 2,221 அதன் மொத்த பரப்பரளவு 61,747 ஹெக்டேர் ஆகும். 54,071 ஹெக்டேர் பரப்பளவுள்ள 680 பதிவு பெற்ற தோட்ட நிறுவனங்களும், 7,676 ஹெக்டேர் பரப்பளவுள்ள 1,541 பதிவு பெறாத தோட்ட நிறுவனங்களும் இதில் அடங்கியுள்ளன. பதிவு பெற்ற தோட்ட நிறுவனத்தில் பணிபுரியும் மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 55,302 அதில் ஆண்கள் 21,060 மற்றும் பெண்கள் 34,242 பேர் ஆவர். பதிவு பெறாத தோட்ட நிறுவனத்தில்

பணிபுரியும் மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 7,709 ஆகும். அதில் ஆண்கள் 3,091 மற்றும் பெண்கள் 4,618 பேர் ஆவர்.

தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு கீழ்காணும் வீட்டு வசதி, மருத்துவ வசதி, குளிர்கால பாதுகாப்பு வசதி, குடிநீர் வசதி ஆகியன வேலையளிப்பவரால் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**வீட்டு வசதி**

இச்சட்டத்தில் தோட்டங்களில் தங்கி பணிபுரியும் தோட்ட தொழிலாளர்களின் உபயோகத்திற்காக நிர்வாகத்தினரால் வீடு கட்டித் தர வழிவகை உள்ளது. தோட்டத் தொழிலாளர்களுக்கு கட்டப்படும் வீட்டின் அளவு 287 சதுர அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும். இவ்வீடுகளுக்கு தண்ணீர் வசதி, மின்சார வசதி மற்றும் சிமெண்ட் தரை வசதி ஆகியவை செய்யப்பட்டிருக்க வேண்டும். தமிழ்நாட்டில் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிர்வாகங்களால் மொத்தம் 42,601 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன.

**மருத்துவ வசதி**

தோட்ட நிறுவனங்களின் நிர்வாகத்தினர் அவர்தம் தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு மருத்துவ வசதிகள் செய்து தர வேண்டும். 1000 மற்றும் அதற்கு மேல் தொழிலாளர்கள் பணிபுரியும் தோட்ட நிறுவனங்களில் சொந்தமாக தோட்ட மருத்துவமனைகளும், 200 தொழிலாளர்களுக்கு மேல் 1000 தொழிலாளர்களுக்கு கீழ் பணிபுரியும் தோட்ட நிறுவனங்களில் ஒருங்கிணைந்த தோட்ட மருத்துவமனைகளும், சொந்தமாக மருந்தகங்களும் இருக்க வேண்டும், மேலும் 200 மற்றும் அதற்கு குறைவாக பணியாளர்கள் உள்ள தோட்ட நிறுவனங்களில் சொந்தமாக மருந்தகங்கள் அல்லது கூட்டு மருந்தகங்கள் பராமரிக்கப்படவேண்டும். உதவி மருத்துவர் (தோட்டங்கள்) தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின்படி தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தினரால் அளிக்கப்பட வேண்டிய மருத்துவ வசதி குறித்த செயல்பாட்டிற்கான அமலாக்க அதிகாரி ஆவார். தமிழ்நாட்டில் 129 மருந்தகங்கள் மற்றும் 44 தொகுதி

மருந்தகங்களும், 29 தோட்ட மருத்துவமனைகளும், 4 தொகுதி தோட்ட மருத்துவமனைகளும் உள்ளன.

**குழந்தை காப்பகங்கள்**

50 மற்றும் அதற்கு மேல் பெண் தொழிலாளர்கள் பணிபுரியும் தோட்ட நிறுவனங்களில் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் நலன் மற்றும் உபயோகத்திற்காக குழந்தைகள் காப்பகம் அமைக்கப்பட்ட வேண்டும். குழந்தைகளுக்கு பால் மற்றும் முழுமையான சிற்றுண்டி வழங்கப்பட வேண்டும். காப்பகத்தில் ஆடை வெளுக்கும் அறை இருக்க வேண்டும். குழந்தைகளுக்கு வருடத்திற்கு இரண்டு இணை உடை வழங்கப்படவேண்டும். குழந்தை காப்பகங்களில் குழந்தைகள் விளையாடுவதற்கு திறந்தவெளி மைதானம் வேலியிடப்பட்டு, விளையாட்டு பொருட்களுடன் இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள தோட்ட நிறுவனங்களில் மொத்தம் 244 குழந்தைகள் காப்பகங்கள் உள்ளன.

**கல்வி வசதி**

ஒவ்வொரு தோட்ட நிறுவனத்திலும் 6 வயதிற்கும் 12 வயதிற்கும் இடைப்பட்ட வயதுள்ள குழந்தைகள் 25க்கு மேல்

இருந்தால் அவர்களுக்கு நிர்வாகத்தால் கல்வி வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். ஆயினும் குறிப்பிட்ட தோட்ட நிறுவனங்களிலிருந்து 1.6 கிலோமீட்டர் தொலைவு சுற்றுவட்டாரத்திற்குள் அரசு கல்வி நிறுவனம் இருந்தால் அத்தகைய நிர்வாகம் தனியாக பள்ளிக் கூட வசதி செய்து தர அவசியம் இல்லை. தமிழ்நாட்டில் தோட்ட தொழிலாளர் குழந்தைகளின் கல்வி வசதிக்காக தோட்ட நிறுவனங்களில் 158 பள்ளிகள் உள்ளன.

**குளிர்கால பாதுகாப்பு (வெப்ப ஆடை)**

தோட்ட நிறுவனங்களில், பணிபுரியும் தொழிலாளர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டத்தை தவிர்த்து மழை மற்றும் குளிரிலிருந்து பாதுகாப்பதற்காக ஆண்டிற்கு ஒருமுறை 1 காட்டுக் கம்பளியும், இரண்டாண்டிற்கு ஒரு முறை போர்த்தும் கம்பளியும் வேலையளிப்பவரால் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை ஒரு குடை மற்றும் ஒரு படுக்கை விரிப்பு வழங்கப்பட்டு வருகிறது.

**குடிநீர் வழங்கல்**

தோட்டத் தொழிலாளர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் போதுமான இடங்களில் வழங்குவது தோட்ட நிர்வாகத்தினரின் கடமையாகும். குடிநீர் கிணற்றிலிருந்தோ அல்லது நீர்த்தேக்கங்களிலிருந்தோ அளிக்க வேண்டியிருந்தால் அவை காலமுறைதோறும் சுத்தகரிக்கப்பட வேண்டும். இக்குடிநீர் சான்றிதழ் சுகாதார துறையின் சுகாதார அலுவலர்களிடமிருந்தோ, சான்றிதழ் அளிக்கும் அறுவை சிகிச்சை மருத்துவரிடமிருந்தோ அல்லது தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தின் பரிசோதனை நிலையங்களிலிருந்தோ பெறப்பட்டிருக்க வேண்டும்.

2013 – 2014ம் ஆண்டில் 3,122 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் 216 வழக்குகள் முடிக்கப்பட்டு, ரூ.3,01,200 அபராதத் தொகையாக விதிக்கப்பட்டுள்ளது.

**தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம் மற்றும் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு**

தோட்டத் தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம் என்பது தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்

துறையின் அரசு முதன்மைச் செயலாளர் தலைமையில் தோட்ட உரிமையாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் அரசு பிரதிநிதிகளை உள்ளடக்கிய சட்ட ரீதியான முத்தரப்பு குழுவாகும். தோட்டத் தொழிலாளர்களுக்கு முறையான வீட்டு வசதியை செய்து தருவது இக்குழுவின் நோக்கமாகும். இது தவிர சட்ட ரீதியற்ற முத்தரப்பு குழுவான தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு தொழிலாளர் ஆணையரை தலைவராகக் கொண்டும், தோட்ட உரிமையாளர், தொழிலாளர் பிரதிநிகள் மற்றும் அரசு தரப்பு பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கியதாகும். தோட்ட தொழிலாளர் சட்டம் மற்றும் விதிகளை அமலாக்கம் செய்வது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்வது இக்குழுவின் நோக்கமாகும்.

## சமூகப் பாதுகாப்பு

## தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்

தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச்சட்டம் 1972-ன்கீழ் 1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் உருவாக்கப்பட்டது. இது அமைப்பு சார்ந்த தொழிலாளர்களுக்கு பங்களிப்பு அடிப்படையில் பல்வேறு

நலத்திட்டங்களை செயல்படுத்துகிறது. இவ்வாரியத்தின் தலைவர் மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ஆவார். மேலும் இவ்வாரியத்தில் 5 தொழிலாளர் பிரதிநிதிகள், 5 வேலையளிப்போர் பிரதிநிதிகள், 4 அரசு பிரதிநிதிகள், 3 சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் 2 பெண் பிரதிநிதிகள் வாரிய உறுப்பினர்களாக உள்ளனர்.

தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக, தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், மலைத் தோட்ட நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் வேலையளிப்பவர்களிடமிருந்து தொழிலாளர் நலநிதியை தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் பெறுகிறது. ஒவ்வொரு தொழிலாளியின் பங்காக ரூ.7/-ம், வேலையளிப்பவரின் பங்காக ரூ.14/-ம், அரசின் பங்காக ரூ.7/-ம் தொழிலாளர் நல நிதியாகப் பெறப்படுகிறது. இது தவிர, நீதிமன்றத்தால் நிறுவனத்திடமிருந்து வசூலிக்கப்படும் அபராதத் தொகை மற்றும் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை மீறியமைக்காக நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் இணைக்கக் கட்டணமும் வாரியத்தில் பெறப்படுகிறது.

**நலத்திட்ட உதவிகள்**

வாரியத்தின்கீழ் 68 இடங்களில் நல மையங்கள் செயல்பட்டு வருகிறது. இம்மையங்களில் பாலர் பள்ளி, தையற்பயிற்சிப் பிரிவு மற்றும் படிப்பகங்கள் உள்ளன. பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் 2013-2014-ம் ஆண்டில் மொத்தம் 18,942 தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு ரூ.1.04 கோடி செலவிடப்பட்டுள்ளது.

**2013–ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டங்கள்.**

1. விபத்து மரண உதவித்தொகையாக ரூ.1 லட்சம் வழங்கும் திட்டம்.
2. தேசிய / மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்.
3. வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மூலம் (Modular Employable Skill) வழியாக கணினி பயிற்சி, உணவக மேலாண்மை பயிற்சி மற்றும் ஓட்டுனர் பயிற்சி அளிக்கும் திட்டம்.
4. கல்வி ஊக்கத் தொகைத் திட்டம் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் 10 மற்றும் 12-ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் முதல் 10 மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

## தொழிலாளர் நலத் திட்டங்கள்

| | | |
|---|---|---|
| 1 | தொழிலாளர் நல மையங்கள் | இங்கு தையற்பயிற்சி பிரிவு, குழந்தைகள் காப்பகப் பிரிவு மற்றும் படிப்பகங்கள் ஆகிய மூன்றும் இணைந்து செயல்படுகிறது. |
| 2 | கல்வி உதவித் தொகை | பட்ட மேற்படிப்பு ரூ.6,000/-<br>பட்டப்படிப்பு ரூ.4,000/-<br>பட்டயப்படிப்பு ரூ.2,500/-<br>மேல்நிலைக்கல்வி ரூ.2,000/-<br>தொழிற்பயிற்சிக் கல்வி ரூ.2,000/- |
| 3 | கல்வி ஊக்கத் தொகை | ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் முதல் 10 மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு<br>10ம் வகுப்பிற்கு – ரூ.2,000/-<br>12ம் வகுப்பிற்கு – ரூ.3,000/- |
| 4 | பாடநூல் உதவித் தொகை | பட்ட மேற்படிப்பு ரூ.3,000/-<br>பட்டப்படிப்பு ரூ.2,000/-<br>பட்டயப்படிப்பு ரூ.1,500/-<br>மேல்நிலைக் கல்வி ரூ.1,000/-<br>(தனியார் பள்ளிகளில் படிப்பவர்களுக்கு மட்டும்) |
| 5 | அடிப்படை கணினி பயிற்சி | ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 5 தொழிலாளர் / சார்ந்தோருக்கு ரூ.1,000/- |

| | | |
|---|---|---|
| 6 | திருமண உதவித் தொகை | தொழிலாளர் மற்றும் அவரைச் சார்ந்தோருக்கு<br><br>பெண்களுக்கு ரூ.5,000/-<br>ஆண்களுக்கு ரூ.3,000/- |
| 7 | மூக்குக் கண்ணாடி உதவித் தொகை | ரூ.500/- வரை வழங்கப்படுகிறது. |
| 8 | தட்டச்சு/சுருக்கெழுத்து உதவித் தொகை | தட்டச்சு மேல்நிலை ரூ.600/-<br>தட்டச்சு கீழ்நிலை ரூ.1,000/-<br>சுருக்கெழுத்து இடைநிலை / அதிவேகம் ரூ.750/-<br>சுருக்கெழுத்து கீழ்நிலை / மேல்நிலை ரூ.1,500/- |
| 9 | இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை | தொழிலாளர்கள் பணிக்காலத்தில் மரணமடைந்தால் அவர்களுடைய வாரிசுதாரருக்கு இயற்கை மரண உதவித் தொகையாக ரூ.25,000/- மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகையாக ரூ.2,000/- வழங்கப்படுகிறது. |
| 10 | விபத்து மரண உதவித்தொகை மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை | தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந்தால் அவருடைய வாரிசுதாரருக்கு விபத்து மரண உதவித்தொகையாக ரூ.1,00,000/- மற்றும் ஈமச்சடங்கு உதவித் |

| | | |
|---|---|---|
| | | தொகையாக ரூ.2,000/- வழங்கும் திட்டம் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. |
| 11 | காது கேட்கும் கருவி, செயற்கை உறுப்பு மற்றும் மூன்று சக்கர வண்டி | காதுகேட்கும் கருவி வாங்க ரூ.1000/– வரை, செயற்கை உறுப்பு வாங்க அரசு நிர்ணயித்த விலை மற்றும் இலவசமாக மூன்று சக்கர வண்டி வழங்கப்படுகிறது. |
| 12 | காச நோய் பிரிவு | தாம்பரம் சாணடோரியம் (சென்னை), திருப்பூர், ஆசாரிப்பள்ளம் (கன்னியாகுமரி), ஆஸ்டின்பட்டி (மதுரை) மற்றும் கீழ்பென்னாத்தூர் (திருவண்ணாமலை) |
| 13 | தொழிலாளர்களுக்கான விடுமுறை இல்லங்கள் | மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. |
| 14 | ஜீவா இல்லம் | தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்குவதற்காக சென்னையில் கட்டப்பட்டுள்ள தங்கும் விடுதி. |
| 15. | ‘‘உழைப்பவர் உலகம்’’ தொழிலாளர்களுக்கான பத்திரிக்கை | நீதிமன்றத் தீர்ப்புகள், தொழிலாளர் நலச் சட்டங்கள், கேள்வி பதில்கள், நுகர்வோர் குறியீட்டு எண் ஆகியவை உள்ளடக்கிய ‘‘உழைப்பவர் உலகம்’’ எனும் மாத இதழ் |

| | | |
|---|---|---|
| | | தொழிலாளர், வேலையளிப்போர் மற்றும் பொதுமக்கள் நலனுக்காக தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தால் வெளியிடப்படுகிறது.<br>இவ்விதழின் தனிப்பிரதி விலை ரூ.7/–, ஆண்டு சந்தா ரூ.80/– மற்றும் ஆயுள் சந்தா ரூ.750/– ஆகும். |

## அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள்

தமிழ்நாட்டில் உள்ள அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பை வழங்கும் பொருட்டு, உறுதியான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. அதற்கேற்ப, தமிழக அரசால், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம் 1982 இயற்றப்பட்டது. இதன் படி, இச்சட்டத்தின் இணைப்பில் உள்ள 69 தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்கள் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சமூக பாதுகாப்பு நலத்திட்டம் வழியாக, கல்வி, திருமணம், மகப்பேறு, இயற்கை மற்றும் விபத்து

மரணம், விபத்து ஊனம் மற்றும் வயது முதிர்ந்த நிலையில் பாதுகாப்பிற்கென மாதாந்திர ஓய்வூதியம் ஆகிய நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

இதுவரை தொழிலாளர் துறையின் கீழ் 17 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களை அரசு தோற்றுவித்துள்ளது. அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்கள் வழங்குவதில் தமிழகம் முன்னோடியாகத் திகழ்கிறது.

## தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்

தமிழக அரசு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தை 30.11.1994-ல் ஏற்படுத்தியது. பின்னர் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத்திட்டத்தினை 1994-ல் உருவாக்கியது. இத்திட்டத்தின் மூலம் கட்டுமானத் தொழில் அல்லது அணைகள் பராமரிப்பு, பாலங்கள், சாலைகள் அல்லது இதர கட்டுமானத் தொழில் ஆகியவற்றில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு நலஉதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்கள்**

தமிழக அரசு, 17.03.1999-ல் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தை ஏற்படுத்தியது. பின்பு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம், 2001-ஐ உருவாக்கியது. இந்நலத் திட்டம் 2006-ஆல் திருத்தியமைக்கப்பட்டது. இது போன்று இதர 14 நல வாரியங்களுக்கும் நலத்திட்டங்கள் உருவாக்கப்பட்டது.

தொழிலாளர் துறையின் கீழ் இயங்கும் 17 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் பட்டியல் பின்வருமாறு:–

| வ. எண் | வாரியங்களின் பெயர் |
|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 2. | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 3. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் |
| 4. | தமிழ்நாடு தையல் தொழிலாளர் நல வாரியம் |

| | |
|---|---|
| 5. | தமிழ்நாடு முடிதிருத்துவோர் தொழிலாளர் நல வாரியம் |
| 6. | தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 7. | தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 8. | தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியம் |
| 9. | தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 10. | தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடுதல் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 11. | தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம் |
| 12. | தமிழ்நாடு பொற்கொல்லர்கள் நல வாரியம் |
| 13. | தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 14. | தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரியம் |
| 15. | தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர்கள் நல வாரியம். |
| 16. | தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம். |
| 17. | தமிழ்நாடு உணவு சமைக்கும் தொழிலாளர்கள் நல வாரியம் |

**சமூக பாதுகாப்பு நலத்திட்டங்களின் கீழ் வழங்கப்படும் உதவித்தொகைகள்**

அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு அமைப்புசாரா தொழிலாளர் நலத்திட்டங்களின் மூலமாக பின்வரும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

| **வ. எண்** | **நலத்திட்ட வகைகள்** | | **தொகை ரூ.** |
|---|---|---|---|
| 1 | விபத்து நிவாரணத் திட்டம் | | |
| | அ) | விபத்து இறப்பு | 1,00,000 |
| | ஆ) | விபத்து ஊனம் (ஊனத்தின்தன்மைக்கேற்ப) | 1,00,000 வரை |
| | இ) | செயற்கை உறுப்புகள் மற்றும் சக்கர நாற்காலி (தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் வரைமுறைகள் மற்றும் நிர்ணயிக்கப்படும் தொகை) | |
| 2 | இயற்கை மரண உதவித்தொகை | | 15,000/- |
| 3 | ஈமச்சடங்கு உதவித்தொகை | | 2,000/- |

| | | | |
|---|---|---|---|
| 4 | கல்வி உதவித் தொகை | | |
| | அ) | 10-ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/- |
| | ஆ) | 10-ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,000/- |
| | இ) | 11-ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/- |
| | ஈ) | 12-ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தைகளுக்கு | 1,500/- |
| | உ) | 12-ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,500/- |
| | ஊ) | முறையான பட்டப்படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 1,500/-<br>1,750/- |
| | எ) | முறையான பட்டமேற்படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 4,000/-<br>5,000/- |
| | ஏ) | தொழில் நுட்பப் பட்டப்படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 4,000/-<br>6,000/- |
| | ஐ) | தொழில்நுட்பப் பட்டமேற்படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 6,000/-<br>8,000/- |
| | ஒ) | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு<br>விடுதியில் தங்கிப்படித்தால் | 1,000/-<br>1,200/- |

| | | | |
|---|---|---|---|
| 5 | திருமண உதவித்தொகை | | |
| | அ) | ஆண் | 3,000/- |
| | ஆ) | பெண் | 5,000/- |
| 6 | மகப்பேறு உதவித்தொகை<br>கருக்கலைப்பு / கருச் சிதைவு | | 6,000/-<br>3,000/- |
| 7 | கண் கண்ணாடி வாங்கிட உதவித்தொகை | | ரூ.500/- வரை |
| 8 | ஓய்வூதியம் | | ரூ.1000/- மாதந்தோறும் |
| 9. | குடும்ப ஓய்வூதியம் (கட்டுமான தொழிலாளர் நல வாரியத்திற்கு மட்டும்) | | ரூ.400/- மாதந்தோறும் |

**திட்டங்களின் நிர்வாகச் செயல்பாடுகள்**

01.11.2008 முதல் மாவட்டந்தோறும் தோற்றுவிக்கப்பட்ட மாவட்ட தொழிலாளர் அலுவலர் (ச.பா.தி) அலுவலகங்களின் மூலம் 17 நலவாரியங்களில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு பதிவு, புதுப்பித்தல், கேட்பு மனு பரிசீலனை மற்றும் உதவித் தொகைகள் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் செயல்படும் மாவட்ட கண்காணிப்புக்குழு, வாரியங்களின் திட்டங்கள் தொடர்பான செயல்பாடுகளை மாவட்ட அளவில் கண்காணிக்கின்றது.

**நிதி ஆதாரங்கள்**

வாரியங்களின் மூலம் வழங்கப்படும் நலதிட்டங்களை செயல்படுத்துவதற்கான நிதி, மேல் வரி / கூடுதல் வரியாகவோ மற்றும் அரசின் மானியமாகவோ பெறப்படுகின்றது.

கட்டடம் மற்றும் கட்டுமானப் பணியின் மொத்த உத்தேச மதிப்பீட்டில் 0.3 சதவீதம் பங்களிப்புத் தொகையாக தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரியத்தால் பெறப்படுகிறது. 17.12.2013 முதல் இப்பங்களிப்பு தொகையினை 0.3 சதவீதத்திலிருந்து 1 சதவீதமாக உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. 2013 – 2014-ஆம் ஆண்டில் பங்களிப்புத் தொகையாக ரூ.151,37,03,650/- தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியம், சாலைகளில் பயணிகள் மற்றும் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களின் உரிமையாளர்களிடமிருந்து மோட்டார் வாகன வரி விதிப்புச் சட்டத்தின்படி கூடுதலாக வசூலிக்கப்படும் 1 சதவீதம் மோட்டார் வாகன வரியை நிதி ஆதாரமாக கொண்டுள்ளது. இதன்படி 2013–2014-ஆம் ஆண்டில்

ரூ.12,14,63,111/- கூடுதல் வரியாக தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நலவாரியத்தால் பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களுக்கு தமிழக அரசு மானியம் வழங்குகிறது. 2013 – 14-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டில் ரூ.90 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**பதிவு, பயனாளிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள்**

2013–2014-ஆம் ஆண்டில் 79,445 தொழிலாளர்கள் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் புதிதாக பதிவு செய்யப்பட்டு 1,14,101 தொழிலாளர்களுக்கு நலத் திட்ட உதவித்தொகையாக ரூ.35,59,12,299/- வழங்கப்பட்டுள்ளது.

2013–2014-ஆம் ஆண்டில் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம் மற்றும் இதர 15 நல வாரியங்களில் 1,85,192 தொழிலாளர்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். ரூ.57,46,45,404/- நலத்திட்ட உதவி தொகையாக 2,57,202 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## பீடித் தொழிலாளர்கள் நலன்

### பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், 1966

பீடி மற்றும் சுருட்டு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் வேலை நிலைமைகளை முறைப்படுத்தவும், நலனைப் பேணவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது. மாநிலத்திலுள்ள 1,554 பீடி நிறுவனங்களில் 2.40 இலட்சம் பீடித் தொழிலாளர்கள் (வீடு மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரிவோர்) ஈடுபட்டுள்ளனர். துறையின் மூலம் 6,364 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 298 வழக்குகள் நீதிமன்றங்களால் முடிக்கப்பட்டு ரூ.7,23,100/- அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது. பீடி நிறுவனங்களை பதிவு செய்வதற்கும், புதுப்பித்தலுக்கும் உரிமக் கட்டணமாக ரூ.1,74,259/- வசூலிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்களின் நலன் (திருத்திய ஒருங்கிணைந்த பீடித் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம் – 2007)

பீடித் தொழிலாளர்களின் சமூக, பொருளாதார நிலையினை மேம்படுத்திட திருத்திய ஒருங்கிணைந்த பீடித்

தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம் 2007, மத்திய அரசால் 01.04.2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி வீடு கட்ட ஆகும் மொத்த செலவுத் தொகை ரூ.45,000/-ல் மத்திய அரசின் சார்பில் ரூ.40,000/-மும் தொழிலாளியின் பங்கு தொகையான ரூ.5,000/-ஐ மாநில அரசு மானியமாகவும் வழங்கியது.

தமிழக அரசு அரசாணை (நிலை) எண்.43, நாள்:26.03.2012, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறையின் மூலம் ஒரு வீட்டின் கட்டுமான செலவை ரூ.1,00,000/-ஆக உயர்த்தி அதில் மாநில அரசின் மானியத்தை ரூ.5,000/-லிருந்து ரூ.60,000/-ஆக உயர்த்தியுள்ளது.

மத்திய அரசின் நிர்வாக ரீதியான ஒப்புதல் பெற்ற பின்னர் ஒரு வீட்டுக்கு ரூ.60,000/- வீதம், மாநில அரசின் மானியமாக நல ஆணையர், ஐதராபாத் அவர்களுக்கு விடுவிக்கப்படும்.

## நுகர்வோர் நலன் பாதுகாப்பு

### சட்டமுறை எடையளவுச் சட்டம், 2009

நுகர்வோர் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு சட்டமுறை எடையளவுச் சட்டம், 2009 உருவாக்கப்பட்டு எடை மற்றும் அளவைகளின் தரத்தை உறுதி படுத்துகிறது. இச்சட்டத்தால் வணிகம் மற்றும் வியாபார நிறுவனங்களில் உள்ள எடைகள், அளவைகள் மற்றும் எடை, அளவை, அல்லது எண்ணிக்கை வாயிலாக விற்கப்படும் / பகிர்ந்தளிக்கப்படும் இதர பொருட்களை முறைப்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில், தொழிலாளர் துணை ஆணையர் (ஆய்வுகள்), சென்னை அவர்கள் சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அலுவலராக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளார்.

சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் களஅலுவலர்கள், 2009-ஆம் ஆண்டு சட்டமுறை எடையளவுச் சட்டம் மற்றும் 2011-ஆம் ஆண்டு சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள் ஆகியவற்றை அமலாக்கம் செய்து வருகின்றனர்.

2013-2014-ஆம் ஆண்டில், ரூ.1,83,220 உரிமக் கட்டணமாகவும், ரூ.24.28 கோடி முத்திரைக் கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டது. 3,71,930 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 11,828 வழக்குகள் முடிக்கப்பட்டு, இணைக்கக் கட்டணமாக ரூ.1.23 கோடி வசூலிக்கப்பட்டது.

## சட்டமுறை எடையளவு (பொட்டலப்பொருட்கள்) விதிகள், 2011

2013-2014-ஆம் ஆண்டில், பொட்டலப் பொருட்களுக்கு ரூ.3.45 இலட்சம் பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. 1,56,863 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதில் 2,880 வழக்குகள் தொடரப்பட்டு, இணைக்கக்கட்டணமாக ரூ.81.36 இலட்சம் வசூலிக்கப்பட்டது.

## குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுதல்

குழந்தை தொழிலாளர் முறை என்பது சமூக பொருளாதார வளர்ச்சியின்மையின் வெளிப்பாடு மட்டுமின்றி ஒரு சமூக அவலமுமாகும். குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுவதற்கு மாநில அரசு மிகவும்

முக்கியத்துவம் கொடுத்து, குழந்தை தொழிலாளர் இல்லாத மாநிலம் என்ற நிலையினை எட்டிட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

2001-ம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, மாநிலத்தில் குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 4.19 இலட்சமாக இருந்தது. அனைவருக்கும் கல்வித் திட்டத்தால் (SSA) 2003-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 70,344 என கணக்கிடப்பட்டது. அதற்கு பின், இந்த குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அரசு மேற்கொண்ட பல்வேறு சட்ட அமுலாக்க நடவடிக்கைகள், மறுவாழ்வு மற்றும் வளர்ச்சி திட்டங்களின் காரணமாக குறைந்து கொண்டே வந்துள்ளது. அனைவருக்கும் கல்வித் திட்டத்தால் 2012-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி வருமானம் ஈட்ட வேண்டிய கட்டாயத்தினால் பள்ளிக்கு செல்லாமல் பணிக்கு செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை 29,656 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**சட்ட அமலாக்கம்**

குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றும் மாநில செயல்திட்டத்தில் சட்ட அமலாக்கம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த அணுகுமுறையாகும். சட்ட அமலாக்கத்தை வலுப்படுத்தும் பொருட்டு, மாவட்ட அளவிலான தடுப்புப் படைகள் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர்களைப் பணியமர்த்துவதைத் தடை செய்யும் பொருட்டு கீழ்குறிப்பிடப்பட்ட சட்டங்களை தொழிலாளர் ஆய்வர்கள் மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர்கள் அமலாக்கம் செய்து வருகிறார்கள்.

1. குழந்தைத் தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986
2. தொழிற்சாலைகள் சட்டம், 1948
3. மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம், 1961
4. பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டம், 1966

5. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947

6. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958

2013-2014-ஆம் ஆண்டில் முறையான ஆய்வுகள், சிறப்பாய்வுகள், திடீராய்வுகள் மற்றும் மாவட்ட குழந்தைத் தொழிலாளர் தடுப்புப் படையின் கீழ் உருவாக்கப்பட்ட குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட அதிரடி ஆய்வுகள் (Raids) என 1,42,626 நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 54 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, 26 வழக்குகள் தொடரப்பட்டன. 14 வழக்குகள் (முந்தைய வருடங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் உட்பட) தண்டனையில் முடிவுற்று, ரூ.1,60,000/- அபராதத் தொகையாக விதிக்கப்பட்டது. 14 வயதிற்குட்பட்டு, பணியிலிருந்து மீட்கப்பட்ட அனைத்து குழந்தைத் தொழிலாளர்களும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்பு பயிற்சி மையங்கள் மற்றும் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர்.

**விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்**

பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வண்ணம், ஒவ்வொரு வருடமும் ஜுன் 12-ஆம் தேதி குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் அனுசரிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின செய்தி பல்வேறு தமிழ் மற்றும் ஆங்கில தினசரிகளில் வருடம்தோறும் வெளியிடப்படுகிறது. குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்த விழிப்புணர்வினை உருவாக்கிடும் பொருட்டு, மாநிலம் முழுவதும் மனித சங்கிலிகள், பேரணிகள், ஸ்டிக்கர்கள் மற்றும் சுவரொட்டிகள் பிரச்சாரம், பொம்மலாட்ட நிகழ்ச்சிகள், கிராமிய நிகழ்ச்சிகள், தெரு நாடகங்கள், பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்களில் உறுதிமொழி எடுத்தல் போன்ற நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலில் 2011 மற்றும் 2012-ஆம் ஆண்டில், சிறப்பாக பணியாற்றிய தருமபுரி மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சியர்களுக்கு மாண்புமிகு தமிழக

முதலமைச்சர் அவர்களால் கேடயம் 13.12.2013 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் வழங்கப்பட்டது.

மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர் முறை தடுப்பு விழிப்புணர்வுக் கூட்டம் 09.07.2013 அன்று நடைபெற்றது. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மையங்களில் பயின்று முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, 10-ம் மற்றும் 12-ம் வகுப்பு பொது தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கும், மற்றும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்படும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் சிறப்பாக பணியாற்றிய ஒரு ஆசிரியருக்கும் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மற்றும் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் அவர்களால் கேடயங்கள் வழங்கப்பட்டன. மேலும், குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலில் சிறப்பாகப் பணியாற்றிய ஒரு தொழிலாளர் ஆய்வர், ஒரு தொழிற்சாலைகள் ஆய்வர், ஒரு தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட இயக்குநர் மற்றும் இரண்டு களப் பணியாளர்களுக்கும் கேடயங்கள் வழங்கப்பட்டன. இக்கூட்டத்தில், முன்பு குழந்தைத் தொழிலாளர்களாக இருந்து

தற்போது கலை, அறிவியல், பொறியியல் மற்றும் மருத்துவ கல்லூரிகளில் உயர்கல்வி பயின்று வரும் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

சென்னையில் 2014-ம் ஆண்டு, ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதத்தில் நடைபெற்ற 40-வது அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழிற்பொருட்காட்சியில் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் குறித்த குறும்பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. மேலும், குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதல் தொடர்பான விளம்பரங்கள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.

மருத்துவ அதிகாரிகள், தொழிலாளர் ஆய்வர்கள் மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறை துணை இயக்குநர்களுக்கென 'குழந்தைகள் உரிமைகள் மற்றும் குழந்தைத் தொழிலாளர் பிரச்சினைகள்' குறித்த ஒருநாள் பயிலரங்கம் 22.02.2014 அன்று தொழிலாளர் துறை சார்பில் சென்னை, மாநில நீதியியல் அகாடமியுடன் இணைந்து நடத்தப்பட்டது.

**தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்**

தமிழகத்தில், சென்னை, கோவை, திண்டுக்கல், தர்மபுரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், நாமக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சி, திருவண்ணாமலை, சேலம், வேலூர் மற்றும் விருதுநகர் ஆகிய 15 மாவட்டங்களில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் செயல்பட்டு வருகிறது. 31.03.2014 அன்றுள்ளபடி, 335 தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்பு பயிற்சி மையங்களில் 11,366 மீட்கப்பட்ட மற்றும் பள்ளி செல்லா குழந்தைகள் கல்வி பயில்கின்றனர். இத்திட்டம் துவங்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை 90,985 குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ் பயிலும் குழந்தைகளுக்கு மாதந்தோறும் ரூ.150/- உதவி தொகை, கல்வி உபகரணங்கள் மற்றும் இலவச மருத்துவ பரிசோதனை அளிக்கப்படுகிறது.

**சிறப்பு நடவடிக்கைகள் மற்றும் சில சாதனைகள்**

அரசின் முறையான பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளான விலையில்லா

சீருடைகள், பாட புத்தகங்கள், புத்தக பை, விளக்கப்படங்கள், பூலோக வரைப்பட புத்தகங்கள், கணித உபகரண பெட்டி, கிரேயன்ஸ், காலணிகள், இலவசப் பேருந்து பயண அட்டை மற்றும் வாரம் 5 முட்டையுடன் கூடிய மதிய உணவு ஆகியவற்றை தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மையங்களில் பயிலும் மாணவர்களுக்கும் தமிழக அரசு வழங்குகிறது. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மையங்களில் பயின்று பின் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, மேற்படிப்புகளில் பயின்று வரும் அனைத்து மாணவர்களுக்கும் மாதந்தோறும் தலா ரூ.500/- உதவித்தொகை அவர்களது கல்வி காலம் முடியும் வரை வழங்கப்பட்டு வருகிறது. 2013-14-ம் கல்வியாண்டில் 876 மாணவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தில் பயின்று பின் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்ட 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்போது பொறியியல் கல்லூரிகளில் பயின்று வருகின்றனர். மேலும் 3 மாணவர்கள் மருத்துவம் பயின்று வருகின்றனர்.

பிப்ரவரி 2013ல் மாநில அளவில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் 150வது பிறந்த நாள் விழாவில்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பாட்டு ஒப்புவிக்கும் போட்டியில் முதல் பரிசு பெற்ற சென்னையின் முன்னாள் குழந்தை தொழிலாளி செல்வி. கே. மஞ்சுவிற்கு பணப்பரிசும், பாராட்டு சான்றிதழும் வழங்கினார்.

கடந்த 29.05.2013 அன்று புதுதில்லியில் 'சார்க்' (SAARC) உறுப்பினர் நாடுகளால் நடத்தப்பட்ட குழந்தைத் தொழிலாளர் தொடர்பான இரண்டாவது சார்க் வட்டர பயிலரங்கு தொடக்க நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் பிரதிநிதிகளாக முன்னாள் குழந்தைத் தொழிலாளர்களாக இருந்து, தற்போது மருத்துவக் கல்வி பயின்று வரும் திரு.இராமலிங்கம் என்பவரும், மென்பொருள் பொறியாளராக (Software Engineer) தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வரும் திரு. மோகன் என்பவரும் கலந்துக்கொண்டு, தங்களுடைய அனுபவங்களை பகிர்ந்துக் கொண்டனர்.

தேசிய அளவில் நடைபெற்ற தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் சமர்ப்பித்த முன்னாள் குழந்தைத் தொழிலாளராக இருந்த 12 வயதுடைய செல்வன் கவின் என்பவர் எழுதிய 'மனித ஆற்றல் இழப்பு' என்ற ஆய்வுக் கட்டுரை தேர்வு செய்யப்பட்டதையொட்டி கவினுக்கு இளம்

விஞ்ஞானி விருது மேதகு தமிழக ஆளுநர் முனைவர் கே. ரோசய்யா அவர்களால் 09.12.2013 அன்று வழங்கப்பட்டது.

மாநில கண்காணிப்பு குழு கூட்டத்தின் தொடர் நடவடிக்கையாக, 14 வயதிற்கு மேற்பட்ட தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட சிறப்பு பயிற்சி மையத்திலிருந்து இடைநின்ற குழந்தைகளுக்கு திறன் வளர்ப்பு மற்றும் வேலைவாய்ப்புக்கு வழிகாட்டும் பயிற்சி தருமபுரி மாவட்டத்தில் நவம்பர் 24, 2013 அன்று நடைபெற்றது, பல்வேறு திறன் வளர்ப்பு பயிற்சிகளில் சுமார் 1200 நபர்கள் கலந்து கொண்டனர்.

**தருமபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்**

தர்மபுரி மற்றும் சேலம் மாவட்டங்களில் பருத்தி விதை உற்பத்தி மற்றும் பருத்தி விவசாயத்தில் ஈடுபடும் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றிட 'ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின் கீழ் 180 துணை ஆசிரியர்கள் மலைப் பகுதி மற்றும் பழங்குடியினர் பகுதியில் உள்ள முறையான மற்றும் அரசு பழங்குடியின உறைவிடப் பள்ளிகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதனால் அப்பள்ளிகளில் வருகைபுரியும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் மற்றும் 35 வட்டார ஒருங்கிணைப்பாளர்களுக்கு செயல்வழி கற்றல் பயிற்சி அளிக்கப்பட்டது. கிராம அளவிலான குழந்தைகள் உரிமைகள் குழுக் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படுகின்றன. இவ்விரு மாவட்டங்களிலும் உள்ள அனைத்து கிராம பஞ்சாயத்துகளிலும் குழந்தை நேயமிக்க கிராம திட்டங்கள் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது.

## தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973-ம் ஆண்டு தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்டது. பின்னர் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, 1988-லிருந்து சங்கமாக செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இக்கல்வி நிலைய ஆட்சிமன்றக் குழுவின்

தலைவராவார். இக்கல்வி நிலையம் தற்போது சென்னை-5, காமராசர் சாலையில், தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய அலுவலக வளாகத்தில், வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கல்வி நிலையம் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமாகும். இக்கல்வி நிலையத்தின் கட்டட வாடகை, ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஊதியம், மின் கட்டணம், வாகன செலவினம் போன்ற முக்கிய செலவுகளுக்காக ஆண்டுக்கு ரூ.1,59,57,000/-ஐ மானியமாக தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

இக்கல்வி நிலையம் கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள், புத்தாக்கப் பயிற்சிகள் / புத்தறிவுப் பயிற்சிகள் போன்றவற்றை, தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் மேற்பார்வையாளர்கள், நிர்வாகிகள், மற்றும் தொழிற்சங்கத்தினர், தொழிலாளர் துறை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நல இயக்குநரக ஆய்வாளர்கள் ஆகியோர்களின் தேவை கருதி, காலமுறையில் நடத்தி வருகிறது.

மேலும், இக்கல்வி நிலையம் புது டெல்லி, சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் நொய்டாவிலுள்ள வி.வி. கிரி தேசிய தொழிலாளர் கல்வி நிலையத்துடன் இணைந்து கருத்தரங்குகள் / பயிற்சிகளை நடத்தி வருகிறது.

01.04.2013-லிருந்து 31.03.2014 வரையான காலத்தில் கீழ்க்கண்டவாறு கருத்தரங்குகள், பயிற்சிகளை இக்கல்வி நிலையம் நடத்தியுள்ளது:—

**கருத்தரங்குகள், பயிற்சிகள்**

| தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட கருத்தரங்குகளின் விவரம் | கருத்தரங்குகளின் எண்ணிக்கை | பயனடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|---|
| கடைகள், வர்த்தக உணவு மற்றும் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களும், தொழிலாளர் நலச்சட்டங்களும் என்னும் ஒருநாள் கருத்தரங்கு | 13 | 1,166 |
| தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும் தொழிலாளர் நலச் சட்டங்கள் | 1 | 100 |

புது டெல்லியில் உள்ள சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) உடன் இணைந்து ஐந்து பயிற்சிகள் நடத்தப்பட்டன.

நொய்டாவில் அமைந்துள்ள வி.வி.கிரி தேசிய தொழிலாளர் கல்வி நிலையத்துடன் இணைந்து ஒரு பயிற்சி நடத்தப்பட்டது.

தொழிலாளர் துறையில் நேரடியாக நியமனம் செய்யப்பட்ட தொழிலாளர் உதவி ஆய்வாளர்களுக்கும், தொழிலாளர் அலுவலர்களுக்கும் அடிப்படை பயிற்சிகள் நடத்தப்பட்டன.

இக்கல்வி நிலையம் நடத்திய 24 கருத்தரங்குகள் / பயிற்சி வகுப்புகள் வாயிலாக தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை அலுவலர்கள் உட்பட 1,541 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**கல்விப் பணிகள்**

இக்கல்வி நிலையம் தொழிலாளர் மேலாண்மையில் இளங்கலை பட்டப்படிப்பு (பி.ஏ. – (எல்.எம்), முதுகலை பட்டப்படிப்பு எம்.ஏ. – (எல்.எம்) ஆகியவற்றை நடத்தி வருகிறது. இக்கல்வி நிலையம் 2001 முதல் முழுநேர மற்றும் பகுதிநேர

ஆராய்ச்சி (பிஎச்.டி.) படிப்பு நடத்துவதற்கு சென்னைப் பல்கலைக்கழகத்தால் ஓர் ஆராய்ச்சி நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கல்வி நிலையம் ஓராண்டு பகுதிநேர (மாலை) தொழிலாளர் நிர்வாகத்தில் முதுகலை பட்டயப்படிப்பு (பி.ஜி.டி.எல்.ஏ) மற்றும் தொழிலாளர் சட்டங்களும் மற்றும் நிர்வாகவியல் சட்டமும் குறித்த ஓராண்டு (பகுதி நேர – வார இறுதி நாட்களில்) பட்டய படிப்பு ஆகியவற்றையும் நடத்தி வருகிறது.

**2012-13 மற்றும் 2013-14 கல்வியாண்டுகளில் மாணவர்கள் சேர்க்கை விவரம்**

| வ. எண் | படிப்பு விவரம் | மாணவர் களின் எண்ணிக்கை 2012-13 | மாணவர்களின் எண்ணிக்கை 2013-14 |
|---|---|---|---|
| 1 | பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) | 55 | 55 |
| 2 | எம்.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) | 44 | 40 |
| 3 | பி.ஜி.டி.எல்.ஏ. | 112 | 102 |
| 4 | தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும் – 2013-14 கல்வியாண்டில் ஆரம்பிக்கப்பட்டது | --- | 50 |

**பிஎச்.டி. (தொழிலாளர் மேலாண்மை)**

| வ. எண் | படிப்பு விவரம் | தற்போது பிஎச்.டி. பயிலும் மாணவர்களின் விவரம் | ஏற்கனவே பிஎச். டி. பட்டம் பெற்றவர்கள் விவரம் |
|---|---|---|---|
| 1 | முழுநேரம் | 2 | 14 |
| 2 | பகுதிநேரம் | 7 | 2 |

**வேலை வாய்ப்பு**

இக்கல்வி நிலையத்தின் மூலம் போதிய வேலைவாய்ப்பினை தேடித்தரும் பொருட்டு ‘‘நியோ மானேஜர்ஸ் கைடன்ஸ் பீரோ’’ என்ற பணியமர்வு வழிகாட்டுக்குழு அமைக்கப்பட்டு செயல்படுகிறது. தொழிலாளர் மேலாண்மையில் பி.ஏ. மற்றும் எம்.ஏ. படிக்கும் மாணவர்களுக்கான வளாகத்தேர்வு மற்றும் பணியில் அமர்த்துதல் ஆகியவற்றுக்கு இக்குழு ஏற்பாடு செய்கிறது.

இக்கல்வி நிலையத்தில் பயின்ற மாணவர்கள் பெரும்பாலான முன்னோடி தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரிகின்றனர்: அவற்றில் சில:

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட், விப்ரோ டெக்னாலஜிஸ், ட்டி.சி.எஸ்., எச்.சி.எல்., காக்னிசன்ட், ஜி.இ. பைனான்ஸ், அப்பல்லோ மருத்துவமனை, ஹுண்டாய், மபோய் கன்சல்டன்சி சர்விசஸ், சிந்தூரி ஹோட்டல்ஸ், ஜி.ஆர்.ட்டி கிராண்ட் டேய்ஸ், சத்தியம் கம்ப்யூட்டர்ஸ், சத்தியம் சினிமாஸ், யூனியன் பாங்க் ஆப் இந்தியா, டாஃபே (TAFE), இனோவா (INOVA) மற்றும் மலையாள மனோரமா.

2013-ம் ஆண்டில் பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) மூன்றாம் வருடம் பயின்ற 15 மாணவர்கள் மற்றும் எம்.ஏ (தொழிலாளர் மேலாண்மை) இரண்டாம் வருடம் பயின்ற 12 மாணவர்களும் சிறந்த வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இந்த 2014 வருடத்தில் 3 பி.ஏ. (தொழிலாளர் மேலாண்மை) மூன்றாம் வருடம் பயிலும் மாணவர்களுக்கு லக்ஷித் கன்சல்டன்சி நிறுவனம் மூலம் வேலைவாய்ப்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

## கல்வி நிலைய மேம்பாடு

இக்கல்வி நிலையத்தின் வகுப்பறைகள் அனைத்திலும் ஒளித்திரைக் கருவிகள் பொருத்தப்பட்டு நவீன வகுப்பறைகளாக (Smart Class Rooms) 2012-13 நிதியாண்டில் மாற்றப்பட்டுள்ளன.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தை திறன்மிகு கல்வி நிலையமாகத் தரம் உயர்த்தி, அம்பத்தூர், அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் அரசு ஒதுக்கியுள்ள இடத்தில், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசு, இக்கல்வி நிலையத்திற்கு கட்டடம் கட்டுவதற்கு அரசாணை மூலம் 3 ஏக்கர் நிலம் ஒதுக்கியுள்ளது.

## "தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும்" புதிய பகுதி நேர பட்டய படிப்பு

13.5.2013 அன்று விதி 110-ன் கீழ் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் "தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும்" என்ற ஓராண்டு பகுதிநேர பட்டயப் படிப்பு வரும்

கல்வியாண்டில் துவக்கப்படும் என்ற அறிவிப்பினை சட்டமன்றத்தில் வெளியிட்டுள்ளார்கள்.

அதன்படி, இப்பட்டயப்படிப்பைத் துவக்குவதற்கான அரசு ஆணை வெளியிடப்பட்டு, 10.8.2013 முதல் இக்கல்வி நிலையத்தில் வார இறுதி நாட்களில் (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. இப்பட்டயப்படிப்பில் 2013-2014-ம் கல்வியாண்டில் 50 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் 2014–15-ம் கல்வியாண்டிற்கு 50 மாணவர்களை சேர்த்துக் கொள்ள அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு கட்டுமானக் கழகம்

தமிழ்நாடு கட்டுமானக் கழகம் 04.01.2013 முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கட்டுமானம் மற்றும் உடலுழைப்பு தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு (Wards) கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழில்களில் பணிபுரிய தேவைப்படும் திறன் எய்தும் பயிற்சியினை தமிழ்நாடு கட்டுமானக் கழகம் அளிக்கிறது. இக்கழகம்

தொழிலாளர்களுக்கு மறுபயிற்சி அளித்தல் மற்றும் திறன் மேம்படுத்துதல் ஆகியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.

தொழிலாளர்களுக்கு குறுகிய கால திறன் எய்தும் பயிற்சி (Modular Employable Skill) மின்சாரம், வர்ணம் பூசுதல், மரவேலை, கட்டுமானம் போன்ற துறைகளில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குனரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் வழங்கப்படுகிறது. இதுவரை 158 நபர்களுக்கு குறுகிய கால திறன் எய்தும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. மற்றும் 308 நபர்கள் தற்போது பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.